O.S. No.114/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 07.07.2026

P.W.1:பூபதிராஜ் த/பெ– சண்முகபெருமாள்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) பிரதிவாதி எந்த தேதியில் கல்வி கடன் பெற்றார் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள கையொப்பத்திற்கும், வா.சா.ஆ.1 கடன் விண்ணப்பத்தில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தற்போது கடனை திருப்பி செலுத்தும் அளவிற்கு வேலையில் உள்ளாரா என்றும், கடனை திருப்பி செலுத்துவதற்கு அவருக்கு வசதி உள்ளதா என்றும் விசாரணை செய்தோமா என்றால் 1ம் பிரதிவாதி வேலைக்கு செல்கிறார். 1ம் பிரதிவாதி குறித்து விசாரணை செய்த அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

2) 1ம் பிரதிவாதி படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார் என்றும், அதனால் தான் கல்வி கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் எங்கள் வங்கியால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.